I ADDL. DISTRICT & SESSIONS COURT, VELLORE
DEPOSITIONS OF WITNESSES
(CHAPTER XXIII CODE OF CIVIL PROCEDURE)
DEPOSITIONS OF WITNESSES P.W.2
OS.NO.144/2019

Name : Sriramalu
Father/Husband Name :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 06.11.2025

இரு தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**விசாரணை தொடங்கும் நேரம்: 02.45 p.m**

**1 மற்றும் 2 வது பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

என் தகப்பனார் பெயர் பெத்தராஜுலு நாயுடு. அவருக்கு 4 ஆண் பிள்ளைகள் 4 பெண் பிள்ளைகள். நான் 2 வது மகன். நான் தான் மூத்த மகன் என்றால் இல்லை எனக்கு அண்ணன் இருக்கிறார். தாவா சொத்து லத்தேரி கோரப்பட்டு மெயின் ரோட்டில் உள்ளது.சுமார் 200 , 300 மீட்டரில் உள்ளது. நான் exservice man என்றால் சரிதான். நான் பணியில் இருக்கும் போது நாட்டில் வெவ்வேறு பகுதியில் குடியிருந்தேன் என்றால் சரிதான்.

1998 ல் ஜனவரி 31 ல் VRS மூலம் பணி ஓய்வு பெற்றேன். அதன் பிறகு நான் 1998–2021 வரை திருப்பதியில் இருந்தேன். 2001–2003 வரை குடியாதத்தில் இருந்தேன். அதன் பிறகு மறுபடியும் ஆந்திராவிற்கு ஓட்டல் வைத்து அங்கு சென்று விட்டேன். பிறகு 2004 ல் நான் ஒசூருக்கு போய்விட்டேன். நான் மேற்சொன்ன விவரங்கள் என் முதல் விசாரணை வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான்.

எனக்கும் 1வது பிரதிவாதிக்கும் எந்த தகராறும் இல்லை. 1வது பிரதிவாதி வசந்தாவிற்கு 3 பெண் பிள்ளைகள். வாதி பானுவிற்கு குழந்தைகள் இல்லை. எனக்கு 2 மகன்கள்.

நான் தாக்கல் செய்துள்ள போட்டோவை என் மகன் தான் எடுத்தார். எதில் எடுத்தார் என்றால் போனில் எடுத்தார். நான் தாக்கல் செய்துள்ள என் பிரமாண வாக்குமூலத்தில் அந்த போட்டோவை என் மகன் எடுத்தார் என்று சொல்லவில்லை என்றால் சரிதான். என்றைக்கு தேதியில் போட்டோ எடுத்தார் என்று முதல் விசாரணை வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லவில்லை.

எந்த போன் நம்பரிலிருந்து இந்த போட்டோ எடுக்கப்பட்டது என்று தெரியுமா என்றால் தெரியாது. அந்த போன் என்ன மாடல் என்று தெரியுமா என்றால் தெரியாது. ஆப்பிள் போன் என்று நினைக்கிறேன் என்று சாட்சி சொல்கிறார்.

எந்த போட்டோக்களிலும் இந்த போட்டோ எந்த தேதியில் எடுக்கப்பட்டது என்ற விவரம் இல்லை என்றால் சரிதான். தாவா சொத்திற்கான கிரகபிரவேசத்தில் எடுக்கப்பட்ட போட்டோ இல்லை என்றால் சரியல்ல.

இந்த போட்டோ தாவா சொத்து சம்மந்தப்பட்டதே இல்லை என்றால் சரியல்ல. இந்த போட்டோ என்றைய தேதியில் எங்கே பிரிண்ட் போடப்பட்டது என்றால் தெரியாது. இது உண்மையான ஆவணம் இல்லை என்றாலும் வழக்கிற்காக தயாரிக்கப்பட்டது என்றாலும் சரியல்ல.

இந்த போட்டோ எந்த மாடல் போனில் எப்போது எடுக்கப்பட்டது யாரால் எடுக்கப்பட்டது மற்றும் அந்த போன் ஆகியவற்றை தாக்கல் செய்தால் தான் இந்திய சாட்சிய சட்டத்தின் படி இதை ஏற்றுக்கொள்ள

முடியும் என்றால் சரியல்ல.

நான் வாதிக்கு ரூ.15,00,000 கொடுத்ததற்கான ஆவணம் எதுவும் இல்லை. சாட்சி சொல்கிறார் அக்கா தங்கச்சிகளுக்கு பணம் கொடுத்தால் ஆவணம் வாங்குவதில்லை. நீதிமன்றத்தில் சாட்சியம் அளித்த என் தங்கை நான் ரூ.15,00,000 கொடுத்ததாக சொல்லவில்லை என்றாலும் நான் இந்த வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல.

நான் தான் மொத்தமாக செலவு செய்து வீட்டை கட்டினேன் என்று சொல்கிறீர்களா என்றால் சரிதான். இந்த வீடு மொத்தமும் செலவு செய்து கட்டியது 1 வது பிரதிவாதியும் அவருடைய கணவரும் தான் என்றால் சரியல்ல. கிரகபிரவேசத்திற்கு 1வது பிரதிவாதியும் அவருடைய கணவரும் இருந்தார்கள். அதுவரை அவர்களுக்கு வீடு கட்டினதே தெரியாது.

இந்த வீடு கட்டியது 1வது பிரதிவாதியும் அவருடைய கணவர் தான் கட்டினார்கள் என்றாலும் நான் தான் 3ம் தரப்பினர் போல் கிரகபிரவேசத்திற்கு வந்தேன் என்றாலும் சரியல்ல. அந்த கிரகபிரவேசம் முடித்த பிறகு தான் தான செட்டில்மெண்ட் எழுதப்பட்டது. நான் ரூ.15,00,000 கொடுத்தாக சொல்லப்படும் நிலையில் என் வங்கி கணக்கில் ரூ.15,00,000 உள்ளதற்கு ஆதாரம் உள்ளதா என்றால் இல்லை.

என் வருமான வரி கணக்கில் என் தங்கைக்கு ரூ.15,00,000 தானமாக கொடுத்தேன் என்று குறிப்பிட்டு எழுதியுள்ளேனா என்றால் இல்லை. தான செட்டில்மெண்ட்டை நான் படித்து பார்க்கவில்லை. சாட்சி சொல்கிறார் அந்த ஆவணத்தை என்னிடம் கொடுக்கவே இல்லை.

எனக்கு இந்த சொத்தை வாதி அந்த நேரத்தில் எனக்கு கொடுக்கவில்லை என்பதால் எனக்கு மன வருத்தம் என்றாலும் ஆகையால் என்னுடைய தூண்டுதலின் பேரில் வாதி இந்த வழக்கை

தாக்கல் செய்துள்ளார் என்றாலும் சரியல்ல.

என் முதல் விசாரணை வாக்குமூலத்தில் சொல்லியுள்ள சங்கதிகள் உண்மைக்கு புறம்பானவை என்றால் சரியல்ல.

**3 முதல் 8 மற்றும் 10 வது பிரதிவாதிகள் குறுக்கு விசாரணை**

1 மற்றும் 2 வது பிரதிவாதிகள் தரப்பில் செய்யப்பட்ட குறுக்கு விசாரணையை அவ்வாறே ஏற்றுக்கொள்ளப்படுகிறது. மேலும் கூடுதல் குறுக்கு விசாரணை இல்லை.

**விசாரணை முடிந்த நேரம்:** 03.00 p.m

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பித்து சரி என்று ஒப்புக் கொண்டு கையெழுத்திட்டார்.

G SANTHI Digitally signed by G SANTHI Date: 2025.11.06 18:51:39 -0100

முதலாவது கூடுதல் அமர்வு நீதிபதி,
வேலூர்.